# சித்தர் குலாப் ராவ்

## சாந்திப்பிரியா



இந்தியாவில் சித்த மனிதர்கள் மிகவும் அதிகம். பல்வேறு இடங்களிலும் அவர்கள் தோன்றிக் கொண்டே இருப்பதும் மறைவதும் சாதாரண நிகழ்வாகும். அதனால்தான் இந்தியாவை சித்த பூமி என அழைக்கின்றனர். அந்த வரிசையில் தோன்றியவரே சித்த புருடரான குண்டாஜி குலாப் ராவ் என்பவர்.

மஹாராஷ்டிர மாநிலத்தில் அமராவதி தாலுக்காவில் 1881 ஆம் ஆண்டு பிறந்த அவர் இளம் வயதிலேயே தாயாரை இழந்து விட்டார். பிறந்து ஒன்பதாவது மாதத்திலேயே கண் பார்வையை இழந்து விட்டார். அதனால் அவருடைய பெயரை பதன்யஷக்ஷ ( புத்திசாலிக் கண்களைப் பெற்றவர்) என அழைத்தனர். அதி புத்திசாலியான அவருக்குக் கண் பார்வை இல்லை என்றாலும் அவருடைய கையில் எந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டாலும் எந்த மொழியில் அது எழுதப்பட்டு இருந்தாலும் அதில் எழுதப்பட்டு உள்ள

அனைத்துச் செய்திகளும் அவருடைய மனதில் பதிந்து விடும். அதுவே அவர் பெற்றிருந்த அபூர்வமான ஆற்றல் ஆகும். அதை போலவேதான் அவருடைய நண்பர்களை ஏதாவது ஒரு புத்தகத்தை படிக்குமாறு கூறுவார். அதை அப்படியே மனதில் கிரகித்துக் கொண்டு ஒப்புவிப்பாராம். அவரது பத்தாவது வயதிலேயே வேத சாஸ்திரங்களை நன்கு பயின்று இருந்தார்.

அவருடைய தாயார் மரணம் அடைந்துவிட்ட பின்னர் அவரது பாட்டியோடு தங்கி இருந்தார் . அப்போதுதான் அவரது அபார அறிவாற்றலை அனைவரும் முற்றிலுமாக புரிந்து கொண்டார்களாம். அவரது வீட்டிற்கு அருகில் இருந்த கிணற்றில் தண்ணீர் நிறப்பிக் கொள்ள வரும் அனைத்துப் பெண்களையும் ஆண்களையும் அவர்களுடைய பெயர் கூறி அழைப்பார். இத்தனைக்கும் அவருக்குக் கண் பார்வை கிடையாது என்ற நிலையில், வருபவர் ஆணா பெண்ணா என பார்க்க முடியாத நிலையில் எங்கிருந்து வந்தது அந்த ஆற்றல் என அனைவரும் உணர்ந்த பொழுதுதான் புரிந்தது அவர் ஒரு தெய்வகப் பிறவி அல்லது சித்த புருடர் என்பது.

இரவு நேரங்களில் அந்த கிணற்றுக்கு அருகே சென்று அமர்ந்து கொண்டு மணிக் கணக்கில் தியானத்தில் இருப்பதைக் கண்ட அவருடைய உறவினர்கள் கவலை கொண்டனர். ஏன் எனில் பலமுறை அவரது இதயத் துடிப்பே நின்ற நிலையில் இருக்குமாம். ஆனால் அவர் பெற்றிருந்த ஆற்றலை எடுத்துக் கூறி அவர்களை ஊர் பெரியவர்கள் அமைதிப்படுத்தினர் என்பதினால் அவர் சமாதி நிலையில் இருந்தாலும் அவரை எழுப்ப முயற்சி செய்யவில்லை.

அவருக்கு பதினைந்து வயதானபோது விவசாயக் குடும்பத்தை சேர்ந்த மண்கர்னிகா எனும் பெண்ணை மணந்து கொண்டார். அதில் இருந்து பல கட்டுரைகளை எழுதத் துவங்கினார். அக்கம் பக்கத்தில் இருந்த ஊர்களுக்குச் சென்று ஆன்மீகம், மத வழிபாடு போன்ற அனைத்தையும் மக்களிடையே பரப்பத் துவங்கினார். அவருக்குப் பதினாறு வயதான பொழுது 1901 ஆம் ஆண்டு சந்த் தியானேஷ்வர மகராஜருடைய சிஷ்யர் ஆனார்.

அதன் பின்னர் தான் சந்த் தியானேஷ்வர மகராஜருடைய மகள் என்றும் பகவான் கிருஷ்ணரை மணந்து கொண்டு விட்டதாகவும் தானும் அவருடைய மனைவிகளில் ஒருவர் எனக் கூறி கழுத்தில் தாலி, நெற்றியில் குங்குமம் அணிந்து கொண்டு, பெண்கள் உடுத்தும் உடைகளையே அணிந்து கொள்ளத் துவங்கினார்.

பார்வையற்ற அவர் பல்வேறு கருத்துக்கள் கொண்ட ஆறாயிரத்திற்கும் அதிக பக்கங்களைக் கொண்ட நூற்றி முப்பத்தி மூன்று புத்தகங்களை எழுதி உள்ளார். கண் பார்வையற்ற அந்த மகானுக்கு உபனிஷத்துக்கள், வேதங்கள், யோகங்கள் மற்றும் புராணங்கள் எப்படி தெரிந்திருந்தன, எங்கிருந்து அவற்றை அவர் கற்றறிந்தார் என்பது புரியாத புதிராகவே இருந்தது. ஆனால் அனைத்துமே தனக்கு தானாகவே வந்ததாக கூறிக் கொண்டார். மேலும் அந்த காலத்தில் நிலவிய கீழ் ஜாதியை சேர்ந்த அவருக்கு அதிகம் பிராமணர்களே சிஷ்யர்களாக இருந்தது இன்னொரு புதிர். அவர் அத்வைத கருத்துக்கு முரண்பட்டவர். மதுர பக்தி மார்கம் மூலம் கிருஷ்ண பக்தியை பரப்பினார். இத்தனை சிறப்புக்களையும் பெற்றிருந்த சித்தர் தமது முப்பத்தி நான்காம் வயதில் அதாவது 1915 ஆம் ஆண்டு இந்த உலகை விட்டு மறைந்தார்.

# Saint Gulab Rao

## Santhipriya



India is known for the Siddhas Purush and several hundreds of them have taken birth and faded away of their own in their very young ages. Rightly people call India a land of Siddhas. Saint Gundaji Gulab Rao was one amongst the Siddha Purush India had.

Saint Gulab Rao Maharaj as people affectionately called him was born in the year 1881 in a small village in Amravati district in the state of Maharashtra. He lost his mother at the age of four and lost his eye sight too when he was nine years old. He was called Pradnyachakshu meaning intellectual eye sighted person. He had a god gift of reading and grasping contents of any book in any

language if he kept the book in his hand. He would ask his friends to read the books and repeat the contents immediately as he had extra ordinary memory. He knew all the Vedas and Shastras at the age of ten years.

After the death of his parents, he stayed at the house of his grandmother during which period people came to know of his extra ordinary intelligence. There was a community well in front of the house where he stayed and the men and women from the village used to come to the well to fetch water. Saint Gulab Rao was very young at that time and he would call them by their names when he was blind and cannot see whether male or female had come to take water. The folks were wonderstruck as to how the blind boy knew their individual names even though he had no eye sight and realized that he must have been a Siddha Purush with divine powers.

He was seen sitting in the state of deep samadhi called meditation in the night times near the well and his grandmother and relatives used to feel worried when even his respiration remained stopped completely, but they dare not attempt to wake him up fearing that they would disturb the samadhi state of meditation as some elderly and wise in the village advised them not to get panic as they knew that he was very much alive even in that state of samadhi though he displayed to have no respiration externally.

He got married to one Mankarnika, daughter of a farmer in nearby village when he was 15 years of age and started writing essays and poetries from the age of sixteen and toured the neighbouring places preaching spirituality. In the year 1901, the great saint of 12th century Sant Dnyneshwar Maharaj met Gulab Rao and accepted him as his disciple.

Saint Gulab Rao Maharaj would call himself to be a daughter of Sant Dnyneshwar and wife of Lord Krishna. He claimed to have married to Lord Krishna, wore dress and the ornaments like woman, applied a mark of tilak with Vermillion (a red spot) and wore mangalsutra (a golden chain with black beads) too around his neck which are usually worn by the Hindu married women.

He is reported to have authored about 133 books on various subjects containing more than 6000 pages, 130 commentaries and about 25,000 stanza in poetry during his life time. Everyone were surprised as to how he mastered Upanishad, Veda, Yoga and other subjects of spiritual in nature. However he claimed that everything came in his mind on their own. Even though he belonged to lower class in those days, much of his disciples were Brahmins. He was against Advaita philosophy and spread Krishna bakthi through Mathura bakthi Marga. He died at the early age of 34 in the year 1915.